முருகப்பெருமான் துணை

**மகான் கடுவெளிச்சித்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

23.07.2021, வெள்ளிக்கிழமை

1. அறமெனும் ஆறுமுக சூட்சுமமே
அண்ணலாக வந்த வள்ளலே
வரம்பெற்ற ஞான சக்தியே
வடிவேலன் பலம் பெற்ற அரங்கனே
2. அரங்கனே உன் பலம்கூறி
அறிவிப்பேன் துல்லிய ஆசி
வரங்களென பிலவ நள்ளி திங்கள்
வகைபட சப்தமதிகதி புகர்வாரம்
(பிலவ வருடம் ஆடி மாதம் 7ம் நாள், 23.07.2021 வெள்ளிக்கிழமை)
3. வாரமதில் கடுவெளிச்சித்தர் யானும்
வழங்குவேன் உலகநலம் பெற
தரமான ஞான சமூகம்
தரணியில் நிலைக்க வேண்டி
4. வேண்டியே சன்மார்க்கம் என
வேலவன் கொள்கை ஆக
தொண்டுபட அரங்கன் அருள
தெய்வ வழிகாட்டலாக எண்ணி
5. எண்ணியே பிரணவ சித்தியான
ஏழாம்படை வீட்டை நாடி
நன்னயமாய் சரணாகதி கண்டு
ஞானியே ஆறுமுக அரங்கா என
6. என செபதபம் சொல்லி
இணைந்து அன்னதானமதில்
தனஉதவி செய்து வருக
தரணியில் தொண்டில் கலந்து
7. கலந்து உலகளாவிய வண்ணம்
கருணைபட சேவை ஆற்றி
வளந்தரும் சமூகம் படைக்க
வல்லமையான மக்கள் படை பெருகி
8. பெருகியே பேருலகம் தானும்
பேரிடர் பிரளயம் அனைத்தும்வெல்லும்
முருகப்பெருமான் வழிபாடு பெருக
முழுமை ஞானம் எங்கும் நிரம்பி

9. நிரம்பி மக்களில் பேதமிலா
நிலைத்தன்மை சமத்துவம் கொண்ட
அறம் நிறைந்த ஞானபூமியாகி
ஆன்மீக ஞான ஆட்சி மலரும்

10. மலரும் ஞானிகள் வெளிப்பட
மாற்றம் உலகம் காணும்
வளரும் வள்ளல் தருமம்
வையகம் இயற்கை வளமுற

11. வளமுற சர்வபலம் கூடி
வந்தடையும் முருகப் பெருமானின்
தலைமை கொண்ட ஞானயுகமாக
தாமுரைத்த துல்லிய ஆசி முற்றே

–சுபம்–